மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவியாளர்கள், பணியாளர்கள், சமையலர்கள் ஆகியோரைத் தேர்வு செய்யும்போதே, 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே இருப்பவர்களைத்தான் தேர்வு செய்ய வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கின்றது. அந்த ஆணையின்படி, அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் காலையிலே வந்து அந்த உதவியாளர் பணியைச் செய்துவிட்டு மாலையிலேயே திரும்புவதற்கு வசதியாகத்தான், அதுவும் பெண்களின் பிரச்சினையிலே அதிகமாக கவனத்தை எடுத்துக்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த உத்தரவைத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

264—

கட்டட வசதி

***5799—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு வட்டம், போச்சம்பள்ளி சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிதாக

அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு மாவட்ட நிருவாகத்தின்மூலமாக நிலம் கையகப்படுத்தப்பட்டு கொடுக்கப்படும்பட்சத்திலே, கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அரிசிப்பாளையம் பகுதியில் மீனவர் எஸ்டேட்டில் ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கே பயனாளிகள் அதிகமாக வருகிறார்கள்; போதுமான இட வசதி இல்லை. அங்கே ஒரு ரிசர்வ் சைட் 20 சென்ட் இருக்கிறது. அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அதை உடனடியாகச் செய்து தருவார்களா என்பதை உங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, மாவட்ட நிருவாகம் மேற்படி இடத்தைக் கையகப்படுத்தி துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்திலே, அந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கண்டிப்பாக ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், நாங்கள் வாழ்ந்து வணங்குகிற அன்னை, தமிழகத்தினுடைய மாட்சிமை தாங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பர்கூர் சட்டமன்றத் தொகுதியினுடைய பகுதியிலே இருக்கிற போச்சம்பள்ளி சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைப் பணிவுடன் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டம், பர்கூர் தொகுதியில் அமைந்துள்ள கிருஷ்ணகிரி பதிவு வட்டத்தில் இருக்கின்ற போச்சம்பள்ளி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு மாவட்ட நிருவாகத்தின் மூலமாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்குக் கோரப்பட்டுள்ளது. அங்கே போச்சம்பள்ளி வட்டம், ஐம்புட்டப்பட்டி கிராமத்திலே சர்வே நெம்பர் 362/2-ல் 25 சென்ட் புறம்போக்கு இடம் தற்போது ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தை மாவட்ட நிருவாகம் கையகப்படுத்தி துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்திலே, கண்டிப்பாக அங்கே ஒரு சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

2012 மே 15]

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மகால் பகுதியில் பத்திரப் பதிவு அலுவலகம், போக்குவரத்து நெருக்கடியான இடத்தில் செயல்பட்டு வருகிறது. இதனை மாற்றும் செயல் திட்டம் அரசிடம் உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து கண்டிப்பாக துறையின்மூலமாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்பதுதான் அம்மா அவர்களுடைய நோக்கம். அதன் அடிப்படையிலே 2011-2012 ஆம் ஆண்டு 52 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். தற்போது தமிழகத்திலே 239 சார்-பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த 239 அலுவலகங்களும் 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்பதுதான் அம்மா அவர்களுடைய நோக்கம். அதன்

அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற அந்தப் பகுதியிலே மாவட்ட நிருவாகத்தின்மூலமாக இடம் கையகப்படுத்தப்பட்டு துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்திலே, கண்டிப்பாக அங்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குத் தடங்கம் பகுதியில் 18 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நீதிமன்ற வளாகத்தினை நடப்பு ஆண்டிலேயே கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி பத்திரப் பதிவுத் துறையைச் சார்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தைப் பற்றிக் கேட்கிறார்; இருந்தாலும் பரவாயில்லை. அவர்களுக்குப் பதில் சொல்கின்றேன். அவர் சொல்கின்ற இடத்தில் தற்போது ஆய்வு மட்டும்தான் செய்யப்பட்டிருக்கிறது. அது மேய்ச்சல் புறம்போக்கு என்று கருதுகிறேன். மேய்ச்சல் புறம்போக்கு என்றால், அது எந்தத் துறையைச் சார்ந்தது என்று பார்த்து, அந்தத் துறைக்கு கருத்துரு அனுப்பி, அந்தத் துறையின் அனுமதி பெற்று, பிறகு அது மாவட்ட நிருவாகத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் அனுமதி பெறப்பட வேண்டும். அதன்பிறகு கட்டடம் கட்டுவதற்கான வரைபடம் தயாரித்து, பிறகு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான், இந்த முயற்சியின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், அந்த 18 ஏக்கர் நிலம் ஆய்வு மட்டுமே செய்யப்பட்டிருக்கிறது என்றும், தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு

2012 மே 15]

சம்பந்தப்பட்ட துறைகளும், மாவட்ட நிருவாகமும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

265—

எரிவாயு சிலிண்டர்

***4457— திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த விலையில் எரிவாயு சிலிண்டர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள எண்ணெய் நிறுவனங்களின் எரிவாயு முகவர்களாக தமிழ்நாட்டில் மொத்தம் 780 முகவர்கள் உள்ளனர். இதில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் இயங்கும் முகவர்களின் எண்ணிக்கை வெறும் 28 மட்டுமே. வீட்டு உபயோக எரிவாயு உருளைகளுக்கான விலையானது, மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. எனினும், தமிழகத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எரிவாயு உருளைக்கான 5% VAT வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்துள்ளார்கள். இதனைத் தவிர்த்து, கூட்டுறவு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனி நிறுவனம் ஆகும். இவை எரிவாயு உருளை முகவர்களாக மட்டும் செயல்படுவதால், கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விநியோகிக்கப்படும் எரிவாயு உருளைகளை மட்டும் குறைந்த விலையில் வழங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.